செ.வெ.எண் : 54 நாள் : 26.05.2021

**கோயம்பத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி அலுவலக கூட்டரங்கில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள்**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி அலுவலக கூட்டரங்கில் இன்று (26.05.2021) கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள். இவ்ஆய்வுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கு.சண்முகசுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி.கவிதா, மாவட்ட வன அலுவலர் திரு.ஆரோக்கிய சேவியர், வட்டாட்சியர்கள் திரு.அரசகுமார், நகராட்சி ஆணையாளர் திரு.காந்திராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தொடர்ந்து மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் கட்டுப்பாட்டு பணிகளை நேரடியாக ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, மாவட்டம் முழுவதிலும் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் இல்லாத தமிழகம் எப்போது திகழ்கின்றதோ, அன்றே எனது மகிழ்ச்சியான நாள் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததுடன், கொரோனா தொற்றுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலை கிராமங்களில் கட்டுப்படுத்தும் வகையில் கிராம ஊராட்சி தலைவர், கிராம ஊராட்சி செயலாளர், கிராம நிர்வாக அலுவலர், கிராம சுகாதார செவிலியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட காவலர் ஆகியோரை உறுப்பினராக கொண்ட **"கிராம ஊராட்சி அளவிலான கொரோனா நோய் தொற்று கண்காணிப்பு குழு"** ஏற்படுத்தப்பட்டு கிராமப்புர பகுதிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள தளர்வுகளற்ற முழு ஊரடங்கின் போதும் பொது மக்களுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள், பால் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தொடர்புடைய துறைகள் மூலமாக மாவட்டத்தின் நகர்பகுதிகளிலும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து வாகனங்கள் மூலமாக வழங்கப்படுவதை அவ்வப்போது கள ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டு வருகின்றது. இந்த சேவை நகர்ப்புறங்களில் சிறப்பாக வழங்கப்படுவதைப் போலவே, கிராமப்புறங்களிலும் வழங்கப்படுவதை உறுதி செய்திட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றைத் தடுப்பதற்கான கேடயமாக தடுப்பூசிகள் விளங்குவதால், அனைவருக்குமான தடுப்பூசிகளை உறுதி செய்திடும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18-44 வயதுக்குட்பட்டோருக்கு தடுப்பூசிகள் செலுத்தும் முகாமினை தீவிரமாக செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், தமிழகத்திற்கு தடுப்பூசிகளின் தேவை அதிகமாக இருப்பதைக் கருத்தில்கொண்டு உலகளாவிய ஒப்பந்தம் மூலம் தடுப்பூசிகள் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இலக்கான கொரோனா தொற்றில்லா தமிழகம் என்ற இலக்கினை அடைய நாம் அனைவரும் அரசு நெறிமுறைகளை பின்பற்றிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என **மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்தார்.**

தொடர்ந்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துமனை, கிணத்துக்கடவு அக்ஷயா பொறியியல் கல்லூரியில் 100 படுக்கை வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு சிகிச்சை மையம், எட்டிமடை நாராயணகுரு பொறியியல் கல்லூரியில் 200 படுக்கை வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு சிகிச்சை மையம், கலைஞர் கருணாநிதி தொழில்நுட்ப கல்லூரியில் 300 படுக்கைகளுடன் அமைக்கப்பட்ட சிறப்பு சிகிச்சை மையம், மதுக்கரை அரசு மருத்துவமனை மதுக்கரை மற்றும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**